(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(7).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 செப்தெம்பர் 25 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2020 ஒக்டோபர் 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் மேம்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2020 ஏப்ரல் 16 ஆம் திகதிய 2171/5 ஆம் இலக்க, 2020 மே 22 ஆம் திகதிய 2176/19 ஆம் இலக்க, 2020 யூன் 30 ஆம் திகதிய 2182/10 ஆம் இலக்க மற்றும் 2020 யூலை 16 ஆம் திகதிய 2184/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2020 ஒக்டோபர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

92/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் வலையமைப்பொன்று உள்ளதென்பதையும்;

(ii) இந்த சுரங்கப் பாதைகள் தொடர்பில் முறையான ஆய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெறாத காரணத்தினால் அவை அழிவடைகின்றதென்பதையும்;

(iii) இது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள், போக்குவரத்து செயற்பாடுகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் தொடர்பிலான ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கென செலவு செய்ய எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள சுரங்கப் பாதைகளை பாதுகாப்பதற்கென அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிட எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

115/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளை மேலும் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

120/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதையை அபிவிருத்தி செய்வதற்குரிய கருத்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை யாதென்பதையும்;

(iii) அதற்கான ஒப்பந்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்திற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

127/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் நிலவிய பயங்கரவாதம் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கிளிநொச்சி முல்லைத்தீவு A 50 பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பாலமாகிய 402 மீற்றர் நீளமான வட்டுவாகல் பாலம் இதுவரை எதுவித புனரமைப்பும் செய்யப்படாமல் ஒரு வாகனம் மாத்திரம் பயணிக்கக்கூடியவாறு சேதமடைந்த சிறியதொரு வீதியாக இருப்பதனால் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இது தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் நான் பல சந்தர்ப்பங்களில் இந்த சபையில் குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வட்டுவாகல் பாலத்தை இருவழிப் பாதையாக மீண்டும் புனரமைத்து மக்கள் வழமைபோல் போக்குவரத்துச் செய்வதற்காக திறந்துவைக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

344/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேயிலை சக்தி நிதியத்தில் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் உள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நிதியத்தின் மூலமாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) தேயிலை சக்தி நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இந்நிதியத்திற்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலை சக்தி நிதியத்தின் மூலமாக தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்கென செலவிடப்படுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்?

(v) தொழிற்சாலைகளுக்கென முதலீடு செய்யப்பட்ட பணத்தொகையினால் ஏதேனும் இலாபம் கிடைக்கின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி இலாபம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

204/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இதய சத்திர சிகிச்சைகள் செய்வதற்காக அரசாங்க வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருடக்கணக்காக காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இச் சத்திர சிகிச்சைகளுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் தனியார் வைத்தியசாலைகளில் மில்லியன் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆம் எனில் —

(i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட இதயம் தொடர்பான நோய்கள் எத்தனை என்பதையும்;

(ii) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் இதய சத்திர சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளில் வருடாந்தம் எத்தனை சத்திர சிகிச்சைகள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய நடைமுறையில் அரசாங்கம் திருப்தி அடைகிறதா என்பதையும்;

(ii) தற்போது நிலவும் இந்நிலைமையை மேலதிக முன்னேற்றத்திற்கான முக்கிய அவதானிப்புகள், சிபாரிசுகள் என்னவென்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2020 ஒக்டோபர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 முதல் இதுவரையில் அழிக்கப்பட்டுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொல்பொருள் தளங்களை அழித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவையென்பதையும்;

(vi) அழிக்கப்பட்டுள்ள, ஆனால் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அடையாளம் காணப்படாதுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) நாட்டின் வரலாற்று பெருமையை பாதுகாக்கும் தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட் 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை ஊழியர்களின் நலநோம்புகைக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

94/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருநாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

121/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்குரியதாக இதுவரை கைச்சாத்திடப் பட்டுள்ள முதலீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளில் இன்றளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 ஒக்டோபர் 22, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கொழும்பு, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தினதும் 6 ஆம் தரத்தினதும் ஒத்த வகுப்புகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் —

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில், புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தரம் 6 இற்கு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்பப் பிரிவிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளி அடையாளம் காணப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திகதி முதல் இன்று வரை நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அத்திகதி முதல் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். (PCR - Polymerase Chain Reaction) பரிசோதனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கொவிட்-19 நோயை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

99/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வில்பத்து தேசிய வனப்பூங்காவை முதன்மையாகக் கொண்ட வனப்போர்வை மனித செயற்பாடுகள் காரணமாக அழிவடைகிறது என்பதையும்;

(ii) வடமத்திய மாகாணம் ஏற்கனவே பகுதியளவில் பாலைவனமாக மாறியுள்ளது என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது இலங்கையின் ஒட்டுமொத்த காலநிலையினையும் பாதித்துள்ளது என்பதையும்;

(iv) ஆகையால், இலங்கையில் தொடர்ச்சியாக யாதேனும் ஒரு பிரதேசம் வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக புத்திஜீவிகள் குழுவொன்றின் வாயிலாக ஆய்வொன்றினை மேற்கொள்வது உகந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

122/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தென்னை மரங்கள் அகற்றப்படும்போது அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கெனப் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) தென்னை மரமொன்றுக்காக வழங்கப்பட்ட விலை எவ்வளவென்பதையும்;

(v) அதன் மூலம் ஈட்டப்பட்ட பணத்தொகையானது தற்போது எந்த நிறுவனத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 ஒக்டோபர் 23, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்சமயம் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப தற்சமயம் நிலவும் வெற்றிடங்கள் யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

123/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்கென இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அக்காணிகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) அக்காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதும் அவற்றுக்கான விளைச்சல்களைப் பெறுகின்றதுமான நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 நவெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

49/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இப்பாடசாலைகளில் தற்சமயம் உயர்தர தொழில்நுட்பப் பாடப் பிரிவை கற்றக் கூடிய வசதிகள் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) பதுளை மாவட்டத்தில் உயர்தர தொழில்நுட்ப பாடங்களை கற்கக்கூடிய வசதிகளை மேலும் விரிவாக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

53/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசுக்கு உரித்தான கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் தற்போதுள்ள தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது பின்பற்றிய நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(v) அந்நிறுவனங்களை நிதிரீதியாகப் பலப்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

342/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2 )

(அ) (i) 2018/05/11 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய கணக்காய்வு பரிசோதகர் சேவையின் II ஆம் தரத்திற்கு கணக்காய்வுப் பரிசோதகர் ஆட்சேர்ப்பு – 2018 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி போட்டிப் பரீட்சை 2018 அக்டோபர் மாதம் 14, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சில பரீட்சை நிலையங்களில் நடைபெற்றன என்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு இதுவரை 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறு பெறுபேறுகளை வெளியிட்ட பின்னர் தகைமை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு உரிய நியமனங்கள் துரிதமாக வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

119/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதை நிர்மாணிக்கப்படும் போது சேதமடைகின்ற சொத்துக்களுக்கும் அதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கும் இழப்பீடுகள் செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீடு பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு இன்றளவில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அத் தொகை விடுவிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

303/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழக மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டிற்கான ஒரு இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ள பின்னணியில் —

(i) இலங்கையில் பல்வகை திறந்த பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) உயர் கல்வியினை பெறுவதற்கு எதிர்பார்க்கும் எவ் வகுதியினரை இலக்குவைத்து தொலைக்கல்வி வசதிகளை விரிவாக்குவதற்கு அரசு நோக்கம் கொண்டுள்ளதென்பதையும்;

(iii) தொலைக் கல்வி வாய்ப்புகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் நிதியத்தின் கீழ் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது எந்த அதிகார முறைமைக்கு உட்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிகளுக்ககாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழகத்திற்காக உறப்படும் செலவினத்தில் அரசின் பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?